**Divine Deliverance** (TAMIL)



# தெய்வீக விடுதலை

*R. ஸ்டான்லி, 5 ஆகஸ்டு 2021*

இந்தியராகிய நாம் 2021 ஆகஸ்டு 15 அன்று நமது 75ஆம் சுதந்திர தின ஆண்டு விழாவைக் கொண்டாடுகிறோம். 1947ஆம் ஆண்டு மறக்க முடியா இந்நாளில் நாம் வெள்ளையர் ஆதிக்கத்திலிருந்து விடுவிக்கப்பட்டோம். விடுதலைப் போராளிகளை, அதிலும் குறிப்பாகச் சிறைகளில் சித்திரவதைக்கு ஆளானோர் மற்றும் உயிர்த் தியாகம் செய்தோரை, நன்றியுணர்வுடன் நினைவுகூருகிறோம். அவர்களது விடாப்பிடியான போராட்டம் இல்லையேல் நாம் இன்றும் அந்நியர் ஆட்சியிலேயே இருந்திருப்போம். விடுதலையைத் தொடர்ந்து நாம் சுவாசிக்கும் சுதந்திரக் காற்றிற்காய் தேவனைத் துதிப்போம்.

பிரிட்டிஷாரின் ஆட்சியிலிருந்து நாம் விடுவிக்கப்பட்டிருந்தும் பிசாசின் ஆதிக்கத்திலிருந்து பெருவாரியான நமது இந்தியச் சகோதர சகோதரிகள் இன்னும் விடுவிக்கப்படவில்லை. ஒவ்வொரு கிறிஸ்தவனும், எந்த நாட்டிலிருந்தாலும், **தெய்வீக விடுதலைத் தூதுவன்** என்றே இயங்கவேண்டும் என்பதே பைபிளைக் கவனித்துப் படிக்கும்போது நான் வரும் முடிவாகும். ஒவ்வொரு கிறிஸ்தவனும் மற்றவர்களை விடுவிக்கிறவனாகவே திகழவேண்டும். இயேசுவே ஆத்தும இரட்சகர்; நாமனைவரும் ஆத்தும ஆதாயகராயிருக்கவேண்டும். இயேசுவே பிரதான மேய்ப்பர்; தொய்ந்துபோய் மேய்ப்பனில்லாது சிதறியலையும் திரள்களுக்கு நாமனைவரும் மேய்ப்பர்களாய்ப் பணியாற்றவேண்டும் (மத் 9:35,36). இயேசுவே அறுவடையின் ஆண்டவர்; நாமனைவரும் அறுவடைப் பணியாளர்களாயிருக்கவேண்டும் (வச 37,38). தேவனது சபையாகிய ''சீயோன் மலைக்கு'' மறுபிறப்பினால் வந்து சேர்ந்துள்ள நாமனைவரும் ''இரட்சகர்கள்'' அல்லது ''மீட்பர்கள்'' என விடுதலைப்பணியில் இறங்கவேண்டும் (ஒப 21; எபி 12:22அ). இயேசுவானவர் இருந்தது போலவும், இருப்பது போலவுமே, நாம் இவ்வுலகில் இருக்கவேண்டும் (1 யோ 4:17). அவர் நடந்தபடியே நாம் நடக்கவேண்டும்; அவர் நடப்பித்தவற்றையே நாம் நடப்பிக்கவேண்டும் (2:6). சாத்தானின் பிடியிலிருந்து மக்களை **விடுவிப்பதற்காய்** நமது கைகள் அவரது கைகளின் நீட்சியாயிருக்கவேண்டும்.

ஒரு சில பிரசங்கிமாரைச் சுட்டிக்காட்டி, ''அவருக்கு விடுதலை ஊழிய வரம் இருக்கிறது'' என்று மக்கள் சொல்லுவதைக் கேட்டிருக்கிறேன். தவறான இவ்வெண்ணத்தைத் திருத்தி, **ஒவ்வொரு விசுவாசியும் விடுதலை ஊழியம்** செய்ய முடியும் என்ற திருமறைச் சத்தியத்தை நிலைநிறுத்துவதே இக்கட்டுரையின் நோக்கம். நோயுற்றோருக்காய் ஜெபிப்பதோ, பிசாசுகளைத் துரத்துவதோ ஒரு சிலருக்கு மட்டும் அருளப்படும் வரமல்ல; அது அனைத்து விசுவாசிகளுக்கும் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரமாகும். விண்ணேறுமுன் நமதாண்டவர் கூறிய பிரிவு வார்த்தைகளைக் கேளுங்கள்: **''விசுவாசிக்கிறவர்களால்** (பிரசங்கிக்கிறவர்களால் அல்ல) நடக்கும் அடையாளங்களாவன: எனது பெயரால் பிசாசுகளைத் துரத்துவார்கள் ... வியாதிக்காரர் மீது கைகளை வைப்பார்கள், அவர்கள் சுகமடைவார்கள்'' (மாற் 16:15-18). இவ்வசனப் பகுதியில், அதாவது மாற்கு 16:15-20இல், இரு வகையினரைக் காண்கிறோம்: ''பிரசங்கிக்கிறவர்கள்'' மற்றும் ''விசுவாசிக்கிறவர்கள்.'' இவ்விரு வகையினரும் சுகமளிப்பு மற்றும் பிசாசு துரத்தும் ஊழியத்தில் ஈடுபட முடியும் என்பதே ஆண்டவர் இங்கு நமக்குத் தரும் செய்தி. சுகம் பெற்று வியாதிப்படுக்கையிலிருந்து நீங்கள் எழுந்து சபைக்கு வரும்போது, ''சுகம் பெறும்படி'' ஒருவருக்காயொருவர் ஜெபியுங்கள் (யாக் 5:16). எலியாவை டீலக்ஸ் மனிதன் என்று புதிய ஏற்பாட்டு விசுவாசிகள் பார்க்கக்கூடாது (வச 17,18). ''நம்மைப் போலவே'' அவருக்கும் தேவைகள், பயங்கள், மனத்தொய்வுகள் போன்றவையெல்லாம் இருந்தன. அவர் ''நீதிமானாய்'' இருந்தார்; நாமும் விசுவாசத்தினால் ''நீதிமான்கள்'' ஆக்கப்பட்டிருக்கிறோம். நாமும் அவரைப் போலவே இயேசுவானவர் மற்றும் தூயாவியானவர் ஆகிய இரு மன்றாட்டினர் உதவியுடன் ''ஊக்கமாய், கருத்தாய்'' ஜெபிக்கலாம்.

## ''விடுதலையின் நற்செய்தி'' (Good News of Deliverance)

கொடும் பாவியாகிய நான் 1962ஆம் ஆண்டு எனது பதினாறு வயதினிலே கல்லூரியில் நுழைந்தபோது தேவனது அற்புதமான கிருபையினால் (Amazing Grace) இரட்சிக்கப்பட்டேன். பாவப் பழக்கங்களிலிருந்து என்னை விடுவித்த தேவ வல்லமையில் வியந்துபோன நான் கல்லூரியில் எனது உடன் மாணவர் மற்றும் நண்பர் யாவரோடும் விடுதலையின் செய்தியைத் துடிதுடிப்புடன் பகிர்ந்துகொள்ளத் தொடங்கினேன். 1963ஆம் ஆண்டு நான் நிறுவிய பொறியியல் கல்லூரி வளாக ஜெப ஐக்கியத்தின் அங்கத்தினர்களாக நாங்கள் கிராமங்களுக்கும் தெருச் சந்திகளுக்கும் சென்று கிறிஸ்து தரும் விடுதலையைப் பறைசாற்றினோம். வெளிநாடுகளிலிருந்து வரவழைக்கப்பட்ட கைப்பிரதிகளும் உள்நாட்டுப் பிரசுரங்களும் திருப்திகரமாயிராததால், எனது நண்பர்களுடன் கலந்தாலோசித்து, ***''விடுதலையின் நற்செய்தி''*** என்றொரு 4-பக்கக் கைப்பிரதியை 1965இல் எழுதினேன். சீன, ரஷ்ய மொழிகளையும் சேர்த்து எத்தனையோ மொழிகளில் வெளியாகியுள்ள இக்கைப்பிரதி பெயர்க் கிறிஸ்தவர் மற்றும் கிறிஸ்தவரல்லாதோரில் பல்லாயிரங்களை இரட்சிப்பிற்குள் கொண்டுவந்துள்ளது. சுத்த சுவிசேஷமே ''இரட்சிப்பிற்கான இறைவன்மையாய்'' மக்களை விடுவிக்கும் (ரோ 1:16).

## தெய்வீக விடுதலைக் கூட்டங்கள் (Divine Deliverance Crusades)

நாங்கள் மாணவராயிருந்த 1960களில் சுவிசேஷகர் N. ஜீவானந்தம் (1931-2006) அவர்கள் எங்களுக்குள் வீரதீர உணர்வைப் புகுத்தினார்கள். மாபெரும் கூட்டங்கள் வேண்டுமென்று காத்திராது அண்ணன் அவர்கள் பட்டி தொட்டிகளுக்கெல்லாம் சென்று விடுதலையின் சுவிசேஷத்தைத் தைரியமாய் முழங்குவார்கள். அவர் பிசாசுகளைத் துரத்துவதை அருகில் நின்று பார்த்திருக்கிறோம். இயேசு என்ற திருநாமத்தின்மீது அவருக்கு 100 சதவீதம் விசுவாசம் இருந்தது. கைவேலைப்பாடான ஒரு ஜாலரை வைத்துக்கொண்டு அவர் குதித்துத் துதித்துப் பாடுவதைப் பார்க்கவேண்டுமே! 1971ஆம் ஆண்டு ஆசீர்வாத இளைஞர் இயக்கத்தை (BYM) நிறுவும்படித் தேவன் என்னை நடத்தியபோது, *''சாதாரண வாலிபர் மூலம் தேவனது அசாதாரண வல்லமை''* என்பதே எங்களது பிரசங்கபீட முழக்கங்களில் ஒன்று. இத்தரிசனத்திற்குச் செயல்வடிவம் கொடுக்க, மூன்று ஊழியத் திட்டங்களை அறிமுகம் செய்தோம்: *Join Jesus Rallies* (JJ) எனும் ''இயேசுவைச் சேருவீர்'' அணிவகுப்புகள், *Divine Deliverance Crusades* (DD) எனும் ''தெய்வீக விடுதலைக் கூட்டங்கள்,'' *Gospel Go-give Camps* (GG) எனும் ''சுவிசேஷத்தைப் போய்க்கொடு முகாம்கள்.'' மாணவர் நடுவில் மேற்கொள்ளப்பட்ட ஆத்துமாதாயப் பணி முயற்சிகள் JJ Rallies எனப்பட்டன. கிராமங்களில் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, நோயாளிகளுக்காய் ஜெபித்து, பிசாசுகளைத் துரத்துவதற்காக இரண்டு அல்லது மூன்று நாட்கள் நடத்தப்படும் கூட்டங்கள் DD Crusades எனப்பட்டன. மலைப்பகுதிகளுக்கும் தொலைவிட ஆதிவாசிக் கிராமங்களுக்கும் சென்று ஒன்றிரண்டு வாரங்கள் செய்யப்படும் ஊழியம் GG Camps எனப்பட்டது. இந்நிகழ்ச்சிகளில் பங்கேற்போர் **வாலிபர், நங்கையரே**. ''முழுநேர ஊழியரல்லாதோரே திருச்சபையின் இறுதி அத்தியாயத்தை எழுதி முடிப்பர்'' என்ற சுவிசேஷகர் T. L. ஆஸ்போர்ன் (1923-2013) அவர்களின் உளி போன்ற வார்த்தைகளே எங்கள் சிந்தனைகளைச் செதுக்கியவை. இக்குழுக்கள் திரும்பி வந்தபோது வெளிப்படுத்திய குதூகலம் இயேசுவின் 70 சீடர் திரும்பி வந்தபோது அவர்களுக்கு இருந்தது போன்றதே: ''ஆண்டவரே, உமது நாமத்தில் பிசாசுகளும் எங்களுக்குக் கீழ்ப்படிகின்றன!'' (லூக் 10:1,17). இன்றோ சத்துருவின் கோட்டைக்குள் கிறிஸ்தவர்கள் ஊடுருவிச் சென்று கிறிஸ்துவுக்காய் மக்களைச் சிறைப்பிடிப்பதற்குப் பதிலாக, பெரும்பாலும் நட்சத்திரப் பிரசங்கிமாருக்கும் மிஷனரி நிறுவனங்களுக்கும் ''ஆதரவாளர்கள்'' என்றே மாறிவிட்டது வேதனைக்குரியது (2 சாமு 22:30; சங் 18:29). இன்றைக்குத் தேவையான தேவனது தாவீதுகள் எங்கே? அவர் *''துதிப்போம் அல்லேலூயா பாடி''* என்று நின்றுவிடாது, *''சாத்தானின் சேனை நடுங்கிடவே''* என்று துணிந்து போர்முனை விரைந்தார்!

## நற்செய்தி அறிவிப்போம், பிசாசுகள் துரத்துவோம்! (Evangelism & Exorcism)

பிசாசுகளை விரட்டுதல் (exorcism) என்பது நற்செய்தியறிவிப்புப் பணியுடன் (evangelism) பின்னிப் பிணைந்தது. பன்னிருவரைப் பணித்தபோது ஆண்டவர் அவர்களிடம் சொன்னது: ''பிரசங்கியுங்கள் ... குணமாக்குங்கள் ... **பிசாசுகளைத் துரத்துங்கள்**'' (மத் 10:1-8). நற்செய்திப் பேராணையிலும் பிசாசு

-- 3

விரட்டுதலை அவர் சேர்த்தார் (மாற் 16:15-17). பிசாசு பிடித்தோரைக் கிறிஸ்துவும் அப்போஸ்தலரும் எவ்விதம் விடுவித்தனர் என்பதைப் படிப்பது நமக்குப் படிப்பினைகளும் ஊக்குவிப்பும் தரும் (மத் 8:28-34; 9:32-34; 12:22-29; 17:14-20; மாற் 1:21-28; 7:25-30; லூக் 8:2; 11:14; 13:10-21; அப் 8:7; 16:16-18). மக்களை விடுவிப்பதற்குப் பிசாசுகளுக்கு எதிரான நமது பிரதான ஆயுதம் கிறிஸ்துவில் நமக்கிருக்கும் **''அதிகாரம்''** என்பதே. துர்ப்பாக்கியமாக, இன்று ஆவியின் வரங்கள் வெளிப்படுத்தப் படும் வட்டாரங்களில் ''அதிகாரம்'' என்பதைவிட ''வல்லமை'' என்பதே அதிகம் வலியுறுத்தப்படுகிறது. குலுக்கிக்கொள்ளவும், கூச்சலிடவும்தான்! பிதாவானவர் குமாரனுக்கு அதிகாரம் கொடுத்தார் (மத் 28:18; மாற் 1:27). கிறிஸ்துவானவர் அந்த அதிகாரத்தை முதலாவது பன்னிருவருக்கும், அடுத்து எழுபது பேருக்கும், முடிவாக அனைத்து விசுவாசிகளுக்கும் கொடுத்துவிட்டார் (மத் 10:1; மாற் 6:7/லூக் 10:1,19/ மாற் 16:17). நமது பெயர்கள் விண்ணுலகில் பதிவேற்றம் செய்யப்பட்டிருப்பதாலேயே இந்த அதிகாரத்தை நாம் பயன்படுத்த முடிகிறது. எனவேதான் பிசாசுகள் நமக்குக் கீழ்ப்படிகின்றன! (லூக் 10:18-20). நாம் கிறிஸ்துவின் அரசுத் தூதுவர்கள். எனவேதான் தோற்கடிக்கப்பட்ட எதிரி நமக்குமுன் தலைவணங்குகிறான்! (2 கொரி 5:20இ). கிறிஸ்துவின் அதிகாரத்திற்கு நாம் அடிபணிந்து அவருக்குக் கீழ்ப்படிந்து நடக்கும்போது சாத்தான்மீது நாம் அதிகாரம் செலுத்தலாம் (ரோ 16:19,20; யாக் 4:7; சங் 81:13,14). அதே வேளையில், நீங்கள் பூரணராயிருந்தால் மட்டுமே பிசாசுகள் உங்களுக்குக் கீழ்ப்படியும் என்று நினைத்துவிடாதீர்கள். அப்படித்தான் என்றால், இயேசுவைத் தவிர வேறெவரும் பிசாசுகளைத் துரத்த முடியாது. சுகமளிப்பு அற்புதம் ஒன்றினைத் தொடர்ந்து, வியப்பில் ஆழ்ந்து நின்ற கூட்டத்தினரிடம் அப்போஸ்தலன் பேதுரு வினவியது சரியானது: ''நாங்கள் **எங்கள் சொந்த சக்தியினாலோ, எங்கள் சொந்த பக்தியினாலோ** இவனை நடக்கப்பண்ணினோமென்று நீங்கள் எங்களையே ஏன் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்?'' (அப் 3:12). ''இயேசுவின் பெயரிலேயே'' அற்புத வல்லமை இருந்ததென்று அவர் அழுத்திக் கூறினார் (வச 16). ஆனாலும் நான் இங்கு ஓர் எச்சரிப்பு விடுக்க விரும்புகிறேன்: பாவத்தில் துணிகரமாய்த் தொடர்ந்துகொண்டு பிசாசுக்குக் கட்டளையிட்டால் அவன் நமக்குமுன் நடுங்குவதற்குப் பதிலாகக் கைதட்டி நகைப்பான் (அப் 19:14-16).

இந்தியக் கிராமங்களிலும் ஆதிவாசிப் பகுதிகளிலும் பிசாசு பிடித்தவர்கள் நிறையவுண்டு. சீயோனிலிருந்து விடுதலைப்புலிகள் வரமாட்டார்களாவென்று அவர்கள் காத்து நிற்கின்றனர். பரலோகம் உங்களுக்கு D.D. பட்டம் வழங்குகிறது! Devil Driver! எந்தப் பல்கலைக்கழகமும் வழங்க முடியாத இப்பட்டம் அகிலவுலகிலும் ஏற்புடையது! குருப்பட்டத்தை (ordination) பிசாசு மதிக்காது போகலாம், ஆனால் அபிஷேகத்திற்குமுன் (unction) அவன் நடுங்குவான்! (அப் 19:13-16; மத் 12:28). *''பிசாசுகளைத் துரத்துவது எப்படி?''* என்று 1992ஆம் ஆண்டு கருத்தரங்கு ஒன்றில் நான் போதித்தேன். அது *காட்டுத் தேன்* என்ற எனது புத்தகத்தில் 12ஆம் அத்தியாயத்தில் உள்ளது.

### பரம்பரை சாபம் (Generational Curse)

பரம்பரை சாபச் சங்கிலியை முறிப்பது என்ற திருமறைக்கு விரோதமான செயலில் விடுதலை ஊழியர் எனப்படும் பலர் இறங்கியிருப்பது துக்கம். ''பரம்பரை ஆவி'' என்று பைபிளில் எங்கும் சொல்லப் படவில்லை. பழைய உடன்படிக்கையின் காலத்திலும், தம்மைப் ''பகைக்கிறவர்கள்'' என்போரிடம்தான் மூதாதையரின் அக்கிரமத்தைத் தேவன் விசாரிப்பார் என்றிருக்கிறது (யாத் 20:5). ''மூதாதையர் புளியங்காய் சாப்பிட்டனர்; பிள்ளைகளின் பற்களில் கூச்சம்'' என்றொரு பழமொழி முற்காலங்களில் இருந்துவந்தது (எசேக் 18:2). ஆனால் தேவன் இதனை மாற்றி அழுத்தந்திருத்தமாய்க் கூறுவதைக் கவனியுங்கள்: **''இனி** இஸ்ரவேலில் இப்பழமொழியைச் சொல்வதில்லை என்பது என் உயிர்மீது ஆணை என்கிறார் கர்த்தராகிய ஆண்டவர்!'' (வச 3). இவ்வுண்மை நித்திய நித்தியமானது என்பதைத் தேவன் அடித்துச் சொல்லும் விதத்தைக் கவனியுங்கள்: *''என் உயிர்மீது ஆணை!''* ஒவ்வொரு மனிதனும், தனது பெற்றோர் அல்லது மூதாதையரது அல்ல, தனது சொந்தப் பாவங்களுக்கே பொறுப்பு (வச 4). தீர்க்கன் எரேமியா மூலமாகவும் அதிமுக்கியமான இச்சத்தியத்தைத் தேவன் அறிவித்துள்ளார் (எரே 31:29,30). ஒரு மனிதன் கிறிஸ்துவுக்குள் இருந்தால், அவன் ஒரு **புதுப்படைப்பு** (creation), கடந்த காலத்திலிருந்து வந்த பரிணமிப்பு (evolution) அல்ல! (2 கொரி 5:17). ''இப்பொழுது'' இவையெல்லாம் முன்னோர்களால்

அல்ல, ''தேவனால்'' உண்டாயிருக்கின்றன (வச 18). நமது முன்னோர்கள் அனுசரித்து வந்த பயனற்ற காரியங்களிலிருந்து நம்மைக் கிறிஸ்துவின் இரத்தம் மீட்டுவிட்டது (1 பேது 1:18,19). தேவன் நம்மை எகிப்தைவிட்டு ''வெளியே'' கொண்டுவந்துவிட்டார். ''இப்பொழுது'' நமக்கு விரோதமான (எகிப்தின்) மந்திரவாதமோ குறி சொல்லுதலோ கிடையாது! ''பிசாசு'' என்ன செய்துகொண்டிருக்கிறான் என்று சொல்லித் திரியாமல், **''தேவன்** என்னென்ன செய்துள்ளார்'' என்று சாட்சியிடுங்கள் (எண் 23:22,23). பரம்பரை சாபம் அல்லது தகடு எடுத்தல் போன்ற பித்தலாட்டங்களைப் பேசித் திரியும் திருடர்களிட மிருந்து ஓடித் தப்பித்துக்கொள்ளுங்கள்!

## ஆன்மீக இருட்டு (Spiritual Darkness)

கிறிஸ்தற்ற திரள்கள் ''காரிருளிலும் சாவின் நிழலிலும் குடியிருந்து'' தவிக்கிறார்கள் (மத் 4:15; ஏசா 9:2; 42:7). நாசரேத்தின் சொகுசு வட்டத்திலிருந்து நப்தலிக்குக் கிறிஸ்தவர்கள் நகரும்வரை ஒன்றும் நடக்காது (மத் 4:13-15). புறப்பட்டுச் செல்வதற்கு ஒருபோதும் ஜெபம் மாற்றாக முடியாது. விசுவாசிகளை ''ஒளியின் பிள்ளைகள்'' என்றும் அவிசுவாசிகளை **''இருட்டின்** பிள்ளைகள்'' என்றும் திருமறை அழைக்கிறது (எபே 5:8). மறுபடி பிறந்துள்ளோர் ''பகலொளியின் பிள்ளைகள்'' எனப்படுகின்றனர். மறுபிறப்பின் அனுபவத்திற்குள் வராதவர்களோ இன்னும் ''இரவிலும் இருட்டிலுமே'' இருக்கின்றனர் (1 தெச 5:5). இருட்டுச் சக்திகளிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ள நாம் ஒவ்வொருவரும் இன்னும் அச்சக்திகளில் அகப்பட்டிருப்போரைப் பொறுப்புணர்வுடன் விடுவித்துக் கொண்டுவர வேண்டும் (கொலோ 1:13). தொண்ணூற்றொன்பது மின்விளக்குகள் எரிந்துகொண்டிருக்கும் இடத்தில் இன்னொரு மின்விளக்காய் இருப்பதைவிட இருள் கவ்வியுள்ள பகுதியில் ஒரு மெழுகுவர்த்தியாய்ப் பிரகாசிப்பதையே நான் விரும்புவேன் (லூக் 15:7). கிறிஸ்தவரல்லாத ஒவ்வொருவரையும் உலகின் ஒளியானவராகிய இயேசுவிடம் கொண்டு வருவதையே ஒவ்வொரு கிறிஸ்தவனும் தனது தலையாயக் கடமையாய்க் கருதவேண்டும் (யோ 1:9; 8:12). ''வெட்கக்கேடான பயனற்ற இருட்டுச் செயல்களை'' வெறுத்து அகற்றிவிடாமல் அவற்றை விரும்பி அணைத்துக்கொள்வதே நமது பலக்குறைவு (எபே 5:11,12). இச்செயல்கள் யாவன? ''பாலியல் ஒழுக்கக்கேடு, பண ஆசை, மடத்தனமான பேச்சு'' போன்றவையும் ''நல்லது, நீதியானது, உண்மையானது'' போன்றவற்றிற்கு எதிரானவையுமே (வச 3-5,9,10). ''கரோனாவின் மூன்றாம் அலை வரப்போகிறது'' என்று உலக சுகாதார நிறுவனம் (WHO) முன்னறிவித்தால் நடுங்கிப்போகிறோம்; ஆனால் ''ஒருவரும் செயலாற்ற முடியாத இரவு வருகிறது'' என்று உலக இரட்சகர் முன்னெச்சரித்தால் நாம் அதனைக் கண்டுகொள்வதேயில்லை (யோ 9:4; 4:42இ). நமது சொல் பேச்சை நமது பிள்ளைகள் அவமதித்தால் நாம் எவ்வளவு வேதனைப்படுகிறோம்! நமது தந்தையாம் தேவனது வார்த்தைகளை நாம் அசட்டை செய்தால் அவர் எவ்வளவாய்ப் புண்படுவார் என்று நாம் நினைப்பதில்லையே!

## விடுதலைச் சரித்திரம் (History of Deliverance)

விவிலியத்தை விசுவாசிக்கும் கிறிஸ்தவன் எவனும் விடுதலை ஊழியத்தில் ஈடுபடாது இருக்க முடியாது. மனிதச் சரித்திரம் முழுவதிலும் திருமறையின் தேவன் தம்மைப் பிரதான விடுதலை நாயகராகவே வெளிப்படுத்தி வந்திருக்கிறார். இதைக் குறித்த தாவீதின் கூற்று அபாரம்: சங்கீதம் 18:2, ''கர்த்தர் என் கன்மலையும், என் கோட்டையும், என் **இரட்சகரும்**, என் தேவனும், நான் நம்பியிருக்கிற என் புகலிடமும், என் கேடயமும், என் இரட்சண்யக் கொம்பும், என் அரணுமாய் இருக்கிறார்.'' தெரிந்துகொள்ளப்பட்ட தமது மக்களைத் தேவன் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்தும், பாபிலோனின் சிறையிருப்பிலிருந்தும், பாலஸ்தீனிய அடக்கு முறையிலிருந்தும் விடுவித்தார். ''தேவனே என் இரட்சிப்பானவர்'' அல்லது ''தேவனே என் மீட்பானவர்'' என்பதே பழைய ஏற்பாட்டின் மையக்கருத்தான சாட்சி (யாத் 15:2; யோபு 13:16; சங் 27:1; ஏசா 12:2; மீகா 7:7; ஆப 3:18). *"Yasa"* என்ற எபிரெயச் சொல்லுக்கு ''இரட்சியும், வெற்றி தாரும், விடுவியும்'' என்றெல்லாம் பொருளுண்டு. *"Sozo"* என்ற கிரேக்கச் சொல்லுக்கு ''இரட்சியும், குணமாக்கும், விடுவியும், நலமாக்கும்'' என்றெல்லாம் பொருளுண்டு. இவ்விரு வார்த்தைகளும் பைபிளில் திரும்பத் திரும்ப வருகின்றன. காலாகாலமாய் ஆடவர் மற்றும் பெண்டிர் பலரைத் தேவன் விடுவிக்கிறவர்களாய்ப் பயன்படுத்தி வந்திருக்கிறார். இதோ அவர்களில்

சிலர்: ஆபிரகாம் (ஆதி 14:14-16), மோசே (அப் 7:35,36), சங் 77:20), யோசுவா (யாத் 17:8-13), தெபோராள் உட்பட பல நீதித்தலைவர்கள் (நியா 2:16; 5:7,12,15), சாமுவேல் (1 சாமு 7:3-13), சவுல் (1 சாமு 11:9-13) மற்றும் தாவீது (2 சாமு 8:1,14). இந்த விடுதலை வீரர்களும் விடுதலைச் சம்பவங்களும் **விடுதலை மன்னராம்** இயேசுவின் வருகைக்கு முன்னடையாளமாய்த் திகழ்ந்தன. இயேசு என்ற பெயருக்குப் பொருளே இரட்சகர் அல்லது மீட்பர் அல்லது விடுவிக்கிறவர் என்பதுதான். அவரைப் பின்பற்றும் யாவரும் விடுதலைப் படைவீரராய் ''**யேகோவா-நிசி**'' எனும் வெற்றிக்கொடி பிடித்துக் கம்பீர நடைபோடவேண்டும் (யாத் 17:15). நமது இரட்சிப்பின் தளபதியாய் இயேசு நமக்கு முன்செல்கிறார் (எபி 2:10).

## நியாயப்பிரமாணத்தின் கட்டு (Bondage of the Law)

நாம் பழைய ஏற்பாட்டின் நியாயப்பிரமாணத்திலிருந்து முறைப்படி விடுவிக்கப்பட்டிருந்தும், இன்னும் புதிய உடன்படிக்கையின் விடுதலைக்குள் நடைமுறையில் காலெடுத்து வைக்காத விசுவாசிகள் ஏராளம். இஸ்மவேலை வெளியே அனுப்பிவிட அவர்களுக்கு மனமில்லை. அவனுக்கு காம்பவுண்டுக் குள் ஓரத்திலாவது ஒரு சிறு வீடு கட்டி அவனை வைத்துக்கொள்ளுகின்றனர்; இதனால் அவனுக்கும் ஈசாக்குக்கும் இடையிலுள்ள சச்சரவு தீர்ந்தபாடில்லை (கலா 4:28-31). பிரியமானவர்களே, பிரமாணமும் கிருபையும் சேர்ந்து குடியிருக்க முடியாது. கிறிஸ்துவினால் கிட்டும் விடுதலையைப் புரிந்துகொள்ளாமல், தேவனது பிள்ளைகள் பலர் மறுபடியும் ''**அடிமைத்தனத்தின் நுகத்தில்**'' மாட்டிக்கொண்டுள்ளனர் (5:1). இது பேராபத்து. இதனைக் ''கிருபையிலிருந்து விழுதல்'' என்றழைக்கிறார் பவுலடியார் (வச 4). பழைய உடன்பாட்டிற்கும் புதியதிற்கும், அது போலவே பிரமாணத்திற்கும் கிருபைக்கும், இடையேயுள்ள வேறுபாட்டினை இறைமக்களுக்கு இடையறாது போதித்துக்கொண்டேயிருக்கும் பெரும் பொறுப்பு பாஸ்டர்மார்களுக்கும் பிரசங்கிமார்களுக்கும் உண்டு. புதிய இரசத்தைப் பழைய தோல் பைகளில் சபைத் தலைவர்கள் ஊற்றிவைக்க முயன்றால் அதைவிட மோசமான விளைவு சபையாருக்கு ஏற்பட வாய்ப்பில்லை (மத் 9:17; மாற் 2:22). ஐயகோ, நமது சபைகளில், ''பூரண சுவிசேஷ'' சபைகள் என் றழைக்கப்படுபவையிலும், திருமறைக்குக் கூடுதலான எத்தனை சட்டதிட்டங்கள்!

1963 முதல் 1968 வரையுள்ள ஆண்டுகளில் எங்கள் கல்லூரிக்கடுத்துள்ள காடுகளில் மாலைத் தியானத்தின்போது முழங்காலில் நின்று பவுலின் நிருபங்களைத் திரும்பத் திரும்ப வாசித்தபோதுதான் பழைய ஏற்பாட்டுப் பிரமாணத்திற்கும் புதிய ஏற்பாட்டுக் கிருபைக்கும் இடையிலுள்ள வேறுபாட்டின் தெளிவான புரிதல் எனக்குக் கிடைத்தது. 1971ஆம் ஆண்டு நான் வெளியுலகத் திருப்பணியைத் தொடங்கியது முதல் இது எனது பிரசங்கங்களில் நெடுகவே வெளிப்பட்டு வந்திருக்கிறது. அது முதல் என்னைக் கேட்டவர்கள் மற்றும் எனது வாசகர்களிடமிருந்து வந்துகொண்டிருக்கும் சாட்சிகள், அவர்கள் பெற்றனுபவிக்கும் **விடுதலையினால்**, என் கண்களைக் குளமாக்குகின்றன. புதிய ஏற்பாட்டு நிருபங்களை, அதிலும் குறிப்பாக ரோமர், கலாத்தியர், எபேசியர், எபிரெயர் ஆகியவற்றை, மறுபடியும் எடுத்து வாசித்துத் தியானிக்கும்படி பிரசங்கிமாரை வருந்திக் கேட்கிறேன். கலாத்தியரது புத்தியீனத்தி லிருந்து உங்கள் சபையினரை விடுவியுங்கள்; மோசேயின் முக்காட்டை அவர்கள் முகங்களிலிருந்து நீக்கிடுங்கள்! (கலா 3:1-3; 2 கொரி 3:12-17). நிருபங்களிலிருந்து எனக்குக் கிடைத்த புரிதல்தான் 1962இல் நான் மறுபடி பிறந்த ஜெபக்குழுவிலிருந்து நான் கொஞ்சங்கொஞ்சமாக விலகுவதற்குக் காரணமாயிருந்தது; ஏனெனில் அக்குழுவிற்குப் பிரமாணக் கொள்கை நிறைந்திருந்த, ஆனால் தங்களை சுவிசேஷத்தினர் (evangelical) என்று அழைத்துக்கொண்ட, ஒரு ஐக்கியத்துடன் தொடர்பு இருந்திருக்கிறது.

## அஞ்ஞானப் பழக்கங்கள் (Pagan Practices)

ஆதிவாசிக் கிராமங்களிலும் தொலைவிடப் பகுதிகளிலும் முதன்முறையாக ஒரு சுவிசேஷகர் காலெடுத்து வைப்பதற்கு முன்னதாகவே சாத்தானின் சகாக்கள் அங்கு சென்றுவிடுகின்றனர். நற்செய்தியறிவிக்கப்படாத இடங்களுக்கு எங்களது மிஷனரிக் குழுக்கள் செல்லும்போது இதனைத் திரும்பத் திரும்பப் பார்த்திருக்கிறோம். திருச்சபையானது நெடுங்காலமாகத் தூங்கிக்கொண்டிருந்த

வேளையில் களைகளைச் சத்துரு விதைத்துவிட்டான் (மத் 13:25). நமது பல சபைகள் படுத்த படுக்கையிலேயே இருந்துவிட்டதால் முதுகில் படுக்கைப் புண்களும் (bedsores) வந்துவிட்டன. மாய வித்தை, பில்லிசூனியம், குறி சொல்லுதல், மந்திரவாதம் போன்றவையெல்லாம் கோடி கோடி மக்களை அடிமைத்தனத்திற்குள் கட்டிவைத்துள்ளன. குழந்தைத் திருமணம், நரபலி, தேவர்கள் தேவதைகளைப் பிரியப்படுத்த உடலை வதைத்தல் போன்ற செயல்களெல்லாம் இந்தியாவில் இன்றும் இருக்கத்தான் செய்கின்றன. சுதந்திர இந்தியா என்றுதான் ஆன்மீக விடுதலை பெறுமோ?

ராஜாராம் மோகன்ராய் அவர்களுடன் சேர்ந்து மிஷனரி வில்லியம் கேரி (1761-1834) அவர்கள் மனிதாபிமானமற்ற ‘உடன்கட்டையேறுதல்’ (sati) எனும் கொடும் பழக்கத்திற்கு எதிராகக் குரலெழுப்பி 1829இல் அது சட்டபூர்வமாக ஒழிக்கப்பட்டது. பிராமணப் பெற்றோருக்குப் பிறந்த பண்டித ராமாபாய் அம்மையார் (1858-1922) அவர்கள் மிதியடிபோல் நடத்தப்பட்ட விதவைகளுக்குச் சமூக அந்தஸ்து தந்திட அயராது உழைத்தார்கள். விதவைகளைக் குறித்த இயேசுவின் கரிசனையே அவர்களைக் கவ்விப் பிடித்திருக்கவேண்டும். 1904இல் நடந்த வேல்ஸ் நாட்டு எழுப்புதலின் காலத்தில் அம்மையார் அவர்கள் ஆவியின் அபிஷேகம் பெற்றார்கள். ஏமி கார்மைக்கல் அம்மையார் (1867-1951) அவர்கள் தேவதாசிப் பழக்கத்திலிருந்து சிறுமியரை விடுவிக்கும் முயற்சிகளில் மும்முரமாய்ச் செயல்பட்டார். எளிய, ஆனால் துணிச்சலான அவர்களது ஊழியத்திற்கு டோனாவூர் ஐக்கியம் ஒரு சாட்சியாய்த் திகழ்கிறது. எங்களது ஆரம்பக்கால ஊழியத்தில் பயனடைந்த மலையாளக் குடும்பத்திலுள்ள இரு மகன்கள் இன்று பாலியல் தொழிலுக்காய் மனிதக் கடத்தலுக்குப் பலியானோர் நடுவில் மகாராஷ்டிர மாநிலத்தில் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இத்தொழிலில் ஈடுபட்டிருப்போரது பிள்ளைகளும் இதற்குள்ளேயே தள்ளப்படு வதைத் தடுப்பதற்கும், அவர்களுக்குக் கல்வி புகட்டி அவர்களைச் சமுதாயத்தில் தலைநிமிர்ந்து நடக்கச் செய்வதற்கும் தீவிர முயற்சிகளில் இவ்விருவரும் தங்கள் குடும்பங்களுடன் ஈடுபட்டுள்ளனர். பிரிய பாஸ்டர்மார்களே, உங்கள் சபையினர் நடுவில் இவ்விதச் சவால்களைத் தூக்கியெறியுங்கள்; இவ்வித விடுதலை ஊழியங்களில் பணியாற்றக் குழுக்களை எழுப்புங்கள். ‘‘கூட்டத்துக்கு வாங்க, கூட்டத்துக்கு வாங்க’’ என்ற பல்லவியையே பாடிக்கொண்டிராதிருங்கள்!

## கிறிஸ்தவ அஞ்ஞானம் (Christian Heathenism)

தேவன் தமது மக்களை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்து, அவர்கள் ஏழு இனத்தினர் குடியிருந்த கானானுக்குள் நுழைய ஆயத்தப்பட்ட வேளையில், மோசே மூலம் அவர் அவர்களுக்குக் கட்டளையிட்டது: ‘‘உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கும் நாட்டில் நீ போய்ச் சேரும்போது, அந்த மக்களினங்கள் செய்யும் அருவருப்புகளின்படிச் செய்யக் **கற்றுக்கொள்ளவேண்டாம்**’’ (உபா 18:9). தீர்க்கன் எரேமியா மூலம் பின்னர் தேவன் கொடுத்த எச்சரிப்பும் இதுவே: ‘‘புறவினத்தாரது மார்க்கத்தை (வழிகளை) **கற்றுக்கொள்ளாதிருங்கள்** ... அவர்களது வழிபாடுகள் (வழக்கங்கள்) வீணானவை’’ (எரே 10:2அ,3அ). புறவினத்தார் அல்லது பிற மதத்தினரின் வாழ்க்கை முறையைக் குறிப்பிட்டு எபேசுவிலிருந்த கிறிஸ்தவ விசுவாசிகளுக்கு அப்போஸ்தலன் பவுல் நினைப்பூட்டியது: ‘‘நீங்கள் இவ்விதமாய்க் கிறிஸ்துவைக் கற்றுக்கொள்ளவில்லை’’ (எபே 4:17-20). இந்தியக் கிறிஸ்தவத்திற்குள் அஞ்ஞானப் பழக்கங்களும் செயல்பாடுகளும் ஏராளம் நுழைந்துள்ளன. ஆயர்களும் பிரசங்கிகளும் இவற்றையெல்லாம் திருமுழுக்காட்டிவிடுகின்றனர். ஆவியின் அபிஷேகம் பெற்ற கிறிஸ்தவர்கள் நடுவிலும் காணப்படும் விக்கிரகாராதனைக்கடுத்த பழக்கவழக்கங்களைக் குறித்து இந்து மார்க்கத்திலிருந்து மனந்திரும்பிய எனது நண்பர்களில் சிலர் வெகுவாய் வேதனைப்படுகின்றனர். அவர்களுக்கு எந்த விளக்கமும் என்னால் கொடுக்க முடிவதில்லை. இதோ சில எடுத்துக்காட்டுகள்: ஒரே நாளில் அத்தனைக் கிறிஸ்தவத் திருமணங்கள் நடப்பதேன்? மாப்பிள்ளைகளை மாடுகள்போல் விற்பதேன்? திருச்சபைத் தேர்தல்களில் இனவெறி மற்றும் இடவெறி தலைவிரித்தாடுவதேன்? (தேர்தல் முறையே திருமறைக்கு ஒவ்வாதது!) புதுமனைப் புகுவிழாவின்போது முதல் விருந்தினராய் வீட்டிற்குள் பசுமாடு அனுப்பப்படும் இந்துப் பழக்கம்தான் வீடு பிரதிஷ்டையின்போது கிறிஸ்தவர்கள் முதலாவது பசும்பால் காய்ச்சும் பழக்கமாய் மாற்றப்பட்டுள்ளது என்றே நான் கருதுகிறேன்! எனது எதிரிகளின் எண்ணிக்கை கூடிக்கொண்டே போகாதிருக்க இத்துடன் நிறுத்துகிறேன். இதோ பவுலடியாரின் புலம்பல்: கலாத்தியர்

4:9-11, ''நீங்கள் தேவனை அறிந்திருக்க, அல்லது தேவனால் அறியப்பட்டிருக்க, வலுவற்றவையும் வறியவையுமான அவ்வழிமுறைகளுக்கு நீங்கள் திரும்பிப்போய், மறுபடியும் அவற்றிற்கு அடிமைப்பட விரும்புவதேன்? நாள், மாதம், நேரம், ஆண்டு என்றெல்லாம் பார்க்கிறீர்களே! நான் உங்களுக்காய்ப் பாடுபட்டு உழைத்தது வீண்போயிற்றோ என அஞ்சி நிற்கிறேன்!''

திருவிவிலியச் சத்தியத்தைவிடச் சடங்காச்சாரப் பாரம்பரியங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் ரோமன் கத்தோலிக்கச் சபையினர் ''சகல ஆன்மாக்கள் தினம்'' (All Souls Day) என்று கொண்டாடுவதில் எனக்கு அதிக ஆச்சரியமில்லை. ஆனால் தங்களைச் சீர்திருத்தச் சபையினர் (Protestants) என்றழைத்துக்கொள்ளும் லூத்தரன், ஆங்கிலிக்கன், மெதடிஸ்டு மற்றும் இதுபோன்ற பல சபைப் பிரிவினரது இந்தக் கல்லறைத் தோட்டக் கொண்டாட்டத்தில் **இறந்தோருக்காய்** வேண்டல் மற்றும் **இறந்தோரிடம்** வேண்டல் ஆகியவையெல்லாம் இடம் பெறுகின்றன. இறந்தோருடன் தொடர்புகொள்ள முயல்வது தேவனாகிய கர்த்தருக்கு அருவருப்பானது; ஏனெனில் அது தீயில் நடப்பது, குறி சொல்லுவது, நாள் பார்ப்பது, பில்லி சூனியம், மந்திரவாதம், மாயவித்தை போன்ற அஞ்ஞானச் செயல்பாடுகளைப் போலவே அபத்தமானது (உபா 18:9-12). ''தேவனானவர் இறந்தோரின் தேவனல்ல, இருப்போரின் தேவன்; அவருக்காவே வாழ்கிறோம்'' என்ற இயேசுவின் வார்த்தைகளைவிட எதுவும் தெளிவாயிருக்க முடியாது (லூக் 20:38). ''ஒரே முறை இறப்பதும், அதற்குப் பின்பு நியாயத்தீர்ப்படைவதும் நியமிக்கப்பட்டிருப்பதால்'' இறந்தோருக்காய் வேண்டுதல் செய்யவும் முடியாது (எபி 9:27). இவ்வுலகை நாம் விடுமுன்னரே நமது நித்தியம் பரலோகிலா நரலோகிலா என்பது நிர்ணயிக்கப்பட்டுவிடுகிறது. ''இறந்தோருக்காய் ஞானஸ்நானம்'' என்பதனைத் திருமறையின் ஒரு போதனை என்றல்ல, உயிர்த்தெழுதலைப்பற்றி அவர் பேசியதை உறுதிப்படுத்துவதற்காக அன்று நிலவியிருந்ததொரு பழக்கத்தை ஓர் எடுத்துக்காட்டாகவே பவுலடியார் பயன்படுத்தினார் (1 கொரி 15:29). ரோமானியத் துண்டுகளிலிருந்தும் அஞ்ஞானச் சடங்குகளிலிருந்தும் புராட்டஸ்டண்டு சபையை **விடுவிக்க** நமக்குப் பல லூத்தர்கள் தேவை!

### நிவாரணப்பணி (Relief Ministry)

பரம ஏழைகளைத் தூக்கியெடுப்பதற்கு விடுதலை ஊழியங்கள் யாவும் போதுமான முக்கியத்துவம் தரவேண்டும். தம்மீதிருந்த ஆவியின் அபிஷேகத்தின் முக்கிய நோக்கமே **''தரித்திரருக்கு** சுவிசேஷம் அறிவிப்பது'' என்றே நமதாண்டவர் சாட்சிபகர்ந்தார் (ஏசா 61:1; லூக் 4:18அ). ''உடைந்த உள்ளங்கள், கலங்கிய கண்கள், நெறிக்கும் நெருக்கங்கள், தகிக்கும் தவிப்புகள்'' போன்றவையே தரித்திரத்தில் வாடும் மக்களுக்குக் கிடைப்பவை (ஏசா 61:2,3; லூக் 4:18,19). அடுத்த உணவு எங்கிருந்து வருமென்று அவர்களுக்குத் தெரியாது. மாற்றுவதற்கு இன்னொரு உடை கிடையாது. ஒன்று வீடிருக்காது, வீடிருந்தால் வசதியிருக்காது. இப்படி அடுக்கிக்கொண்டே போகலாம். இல்லாதோருடன் தன்னை முழுவதும் அடையாளப்படுத்திக்கொள்ளாத ஊழியம் எதற்கும் கிறிஸ்துவின் சிந்தை இல்லை என்றே சொல்லவேண்டும் (மத் 25:31-46). செய்யத் தவறியவை எனும் பாவங்கள் (sins of omission) ''நித்திய தண்டனைக்கு'' உரியவை (வச 46அ). பக்தன் யோபுவுக்கு **விடுதலை ஊழியம்** (Deliverance ministry) இருந்தது. எளியவருக்கு அவர் தந்தையாயிருந்தார் (யோபு 29:16). எளியவரை ஒடுக்கிய செல்வரைச் செவிட்டிலறைந்து அவர்கள் பிடியிலிருந்து அவர்களை விடுவித்தார் (வச 17). தீர்க்கன் யோவானிடம் **விடுதலைச் செய்தி** (Deliverance message) இருந்தது. எளியவரை ஒடுக்குபவரை ''கோடாரி'' மற்றும் ''எரிநெருப்பு'' போன்ற வார்த்தைகளால் அவர் எச்சரித்தார் (லூக் 3:9-14). நமது சுகமளிப்புக் கூட்டங்களின் முன்வரிசை இருக்கைகளைத் ''தரித்திரர், குருடர், முடவர், தள்ளப்பட்டோர்'' போன்றோரால் நிரப்பும்வரை கண்கவரும் அற்புதங்கள் எதுவும் நடந்துவிடாது (லூக் 14:21-23).

வில்லியம் மற்றும் கேத்தரின் பூத் தம்பதியரால் 1865இல் நிறுவப்பட்ட இரட்சண்ய சேனை (Salvation Army) என்பது போன்ற ஊழியங்களால் திருச்சபைச் சரித்திரம் நறுமணம் பெற்றுள்ளது. துரத்தப்பட்டோருக்கு உணவு, உடை, உறைவிடம், மருத்துவ வசதி போன்றவை கொடுக்கும்படி இவ்வூழியத்தினர் கவனிப்பாரற்றுக் கிடந்த பகுதிகளுக்கு விரைந்தனர். நற்செய்தியறிவிப்பும் முக்கியத்துவம் இழக்கவில்லை. அடக்க ஊர்வலம் ஒவ்வொன்றும் சுவிசேஷப் பவனி போலாயிற்று. *"Soap, Soup,*

-- 8

*Salvation"* — அதாவது, *''உடை, உணவு, இரட்சிப்பு''* என்பதே இரட்சண்ய சேனையின் முழக்கம். அவர்களது அணுகுமுறையைக் கேலி செய்யும் கிறிஸ்தவர்களையும் பிரசங்கிமாரையும் நான் கடிந்து கொள்கிறேன். அது உங்கள் வேத அறிவின்மையையே காட்டுகிறது. குளிப்பாட்டாமலும், காலையுணவு கொடுக்காமலும் உங்கள் பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்புவீர்களோ? வெறும் வயிற்றோடு அவர்கள் வகுப்பில் பாடங்களைக் கவனிக்க முடியுமோ? நன்றாக உடுத்தாமல் ஆலய ஆராதனைக்குச் செல்வீர்களோ? மூன்று வேளை சாப்பிட்ட பிறகும் ''அன்றன்றுள்ள அப்பம் *இன்று* தாரும்'' என்று ஜெபிக்கிறீர்களே! பசித்தோருக்கு ஆகாரம் கொடுக்காமல் அவர்களுக்கு ஆசீர்வாதம் கூறிப் பயனென்ன? (யாக் 2:15-17). தானதர்மத்துடன் சுவிசேஷப்பணி எப்போதும் இணைக்கப்படவேண்டுமென்று உங்களுக்கு யாரும் சொன்னதுண்டோ? எவ்விதப் பாகுபாடுமின்றி நல்லோர்மீதும் தீயோர்மீதும் விண்ணகத் தந்தை சூரியவொளி வீசுகின்றார், மற்றும் வான்மழை பொழிகின்றாரே! இவ்விதக் குணாதிசயமின்றி கிறிஸ்தவப் ''பூரணம்'' எங்கே? (மத் 5:45,48). நமது தானதர்மச் செயல்களின் பயனாளிகளில் கிறிஸ்துவைப் பின்பற்றத் தீர்மானிப்பவர்கள் 10 சதவீதத்தினர் மட்டுமே என்றாலென்ன? (லூக் 17:11-17).

தம்பித் தங்கையரே, **எளியவரை ஆசீர்வதிக்கத்** திட்டமாய் எதையாவது செய்திட இன்றே தீர்மானியுங்கள். தள்ளப்பட்டோர் மற்றும் ஒடுக்கப்பட்டோரது முகங்களை மலரச்செய்வதில் நமக்குக் கிடைக்கும் மகிழ்ச்சிக்கு எல்லையே கிடையாது. 1963 முதல் 1968 வரையிலான எனது இளநிலைக் கல்லூரிப் படிப்பாண்டுகளில் எங்களில் அறுவர் எங்களுக்கிருந்த குறைந்த கைச்செலவுப் பணத்திலிருந்து தின்பண்டங்கள் வாங்கிக்கொண்டு தொழுநோயினர் கூடும் ஓரிடத்திற்கு வாரந்தோறும் செல்லுவோம். விரல்கள் இழந்த அவர்கள் கைதட்டிப் பாடுவதோடு நாங்களும் சேர்ந்து தேவனைத் துதிப்பது மண்ணுலகில் விண்ணுலகந்தான்! அவ்விதத் தானதர்மச் சிந்தை இன்றுவரை எனது பிரசங்கங்களிலும் பிரசுரங்களிலும் இழைபோல் ஓடிக்கொண்டேயிருக்கிறது. நான் வேறு எப்படித்தானிருக்க முடியும்? ருசி கண்ட பூனையாச்சுதே! MSW (Master's in Social Work) போன்ற கல்வி பயின்று World Vision போன்ற நிவாரணப்பணி நிறுவனங்களில் சேரும்படிக் கிறிஸ்தவ வாலிபர், நங்கையரை அழைக்கிறேன். திடகார்த்தமான உங்கள் வாழ்காலத்தை நாதியற்றோரைத் தூக்கிவிடுவதற்காய்ச் செலவிடுங்கள் (நீதி 31:8,9; ஏசா 1:17; எரே 21:12அ). *"Missionaries of Charity"* என்று தனது நிறுவனத்திற்குப் பெயர் சூட்டிய அன்னை தெரசா (1910-1997) அவர்களைப் பாராட்டுகிறேன். மருத்துவக் கல்லூரியில் இடம் கிடைத்தால், டாக்டர்கள் இல்லாத பகுதிகளிலேயே தொண்டாற்றுவேன் என்று திட்டமாய்த் தீர்மானித்து விடுங்கள். தெய்வீக சுகமளிப்பு ஊழியமும் மருத்துவப்பணியும் இணைந்தே செல்லவேண்டும். ''அன்றன்றுள்ள அப்பம்'' தாரும் என்று ஜெபித்துவிட்டுச் சாப்பாட்டுச் செலவுக்காய்ச் சம்பாதிக்க வேலைக்குச் செல்லுகிறோமல்லவா? கல்லில் இடறாதபடித் தூதர்கள் தாங்குவார்களென்றாலும் காலணிகள் போட்டுத்தானே நடக்கிறோம்? மதிப்பிற்குரிய சுகமளிப்பு ஊழியரே, கரோனா தடுப்பூசி போட்டுக்கொள்ளத் தயங்காதீர்கள், தடுப்பூசி போட்டுக்கொண்டால் அதனை மறைக்கவும் முயலாதீர்கள். மனிதராயிருங்கள். சாதாரணமாயிருங்கள். பிணியாளிகளுக்கு வைத்தியன் தேவைதானே? எலும்பு சிகிச்சை நிபுணர் உங்கள் முதுகு வலியைக் குணப்படுத்துவார். அதுவும் விடுதலை ஊழியம்தான் (லூக் 13:16). பிரான்ஸ் நாட்டின் பிரபல அறுவை சிகிச்சை நிபுணரான Dr. அம்புரோஸ் பாரே (1510-1590) என்பவர் சொன்னது: ''கட்டுப்போடுவது நான்; குணமாக்குவதோ கடவுள்!'' MBBS படிக்க இடம் கிடைக்காவிடில் சோர்ந்துபோகாதீர்கள். டாக்டர்களைவிடச் செவிலியர்தான் நோயாளிகளுடன் அதிக நேரமும் அதிக நெருக்கமுமாய் இருக்கமுடியுமென்பது உங்களுக்குத் தெரியுமா? நவீன செவிலியர் பணியின் நிறுவனரென அழைக்கப்படும் பிளாரன்ஸ் நைட்டிங்கேல் அம்மையார் (1820-1910) அவர்கள் இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த ஒரு **சமூகச் சீர்திருத்தவாதி**. ''விளக்கேந்திய மாது'' (The Lady with the Lamp) என்றே அவர் அழைக்கப்பட்டார். அவர்களது சரிதையை Googleஇல் வாசித்துச் சவாலடையுங்கள்.

## பூரண சுவிசேஷம் (Full Gospel)

நான் சமூக சுவிசேஷத்தைப் பறைசாற்றுகிறேன் என்று குற்றஞ்சாட்டப்பட வாய்ப்புண்டு. எனது விவிலிய அறிவைப் பொருத்தவரையில், ''சமூக'' சுவிசேஷம் (Social Gospel) என்றோ ''ஆன்மீக''

சுவிசேஷம் (Spiritual Gospel) என்றோ எதுவும் கிடையாது. இயேசு கிறிஸ்துவின் **பூரண சுவிசேஷத்திற்கு** இரு பக்கங்கள் உண்டு: சமூக நோக்கு மற்றும் ஆன்மீக நோக்கு. இயேசுவின் பிறப்பானது இரு பரிமாணச் செய்தியைக் கொண்டுவந்தது: ''தேவனுக்கு மகிமை'' **அத்துடன்** ''மனிதர்மீது பிரியம்'' (லூக் 2:14). இயேசுவின் பாலியப் பருவமானது இரு பரிமாண வளர்ச்சியை உள்ளடக்கியிருந்தது: ''தேவ கிருபை'' **அத்துடன்** ''மனிதர் தயவு'' (வச 52ஆ). அவரது ஊழியம் முழுவதிலும் இரட்டை நோக்கு காணப்பட்டது: மக்களது ஆன்மீகத் தேவை அத்துடன் உடலுக்கடுத்தத் தேவையைச் சந்திப்பது (லூக் 4:18,19). முதலாம் மிஷனரிக் குழுவினருக்குப் பேதுரு, யாக்கோபு, யோவான் ஆகிய மூத்த அப்போஸ்தலர் கொடுத்த எச்சரிப்பு: ''மிஷனரிப்பணியில் எளியவரை மறந்துவிடாதீர்கள்'' (கலா 2:9,10). ஆன்மீகச் சிந்தையும் சமூகநலப் பார்வையும் இரு கண்கள் அல்லது இரு கைகள் அல்லது இரு கால்கள் போன்றவை. சராசரி அளவே அதிகம் என்று நினைக்கும் அளவிற்கு நமது சமூகநலப் பார்வை சராசரிக்கும் குறைந்துவிட்டது துர்ப்பாக்கியம். Our social conscience has become so subnormal that the normal looks abnormal! கடவுளற்ற கம்யூனிசத்திற்கும் கருணையற்ற கிறிஸ்தவத்திற்கும் நான் எதிரிதான். கிறிஸ்தவம் இல்லாத தானதர்மச் சிந்தையும், தானதர்மச் சிந்தையில்லாத கிறிஸ்தவமும் ஒன்றுபோல் மோசந்தான்! Dr. E. ஸ்டான்லி ஜோன்ஸ் (1884-1948) அவர்கள் அமெரிக்காவைச் சேர்ந்ததொரு மெதடிஸ்ட் மிஷனரி. நாம் பாசத்துடன், குறிப்பாக சுதந்திர தினத்தன்று, நினைவுகூரும் நமது தேசத் தந்தை மகாத்மா காந்தி (1869-1948) அவர்களுக்கு அவர் ஒரு நெருங்கிய நண்பர். அவரது ஒரு கூற்று இதோ: ''ஆன்மீகப் பரிமாணம் இல்லாத சமூகநலச் சுவிசேஷம் ஒரு பிரேதம்; சமூகநலப் பரிமாணம் இல்லாத ஆன்மீகச் சுவிசேஷம் அலைந்து திரியும் ஓர் ஆவி! ஐரோப்பிய மற்றும் மேற்கத்திய மிஷனரிகளின் இருபரிமாண, சமநிலைப் பணிகளால் இந்தியக் கிறிஸ்தவராகிய நாம் இன்றும் அனுபவித்துக்கொண்டிருக்கும் நன்மைகளை மறக்க முடியுமோ?

## அடிமைத்தனத்திலிருந்து விடுதலை (Deliverance from Slavery)

எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து எவ்விதம் தேவன் தமது மக்களை விடுவித்தார் என்பதே இஸ்ரவேலரின் சரித்திரத்தில் தலைசிறந்த விடுதலைச் சம்பவம். ஆண்டுதோறும் கொண்டாடப்பட்ட **பஸ்கா** பண்டிகையில் இது நினைவுகூரப்பட்டது. சங்கீதங்கள் 105, 106 மற்றும் 107 இதனைச் சார்ந்தவை. நமது இரட்சகர் மற்றும் மீட்பர் என்ற வகையில் கிறிஸ்துவே இன்று நமக்குப் ''பஸ்கா'' ஆனவர் (1 கொரி 5:7). அடிமைகளை எப்படி நடத்தவேண்டுமென்று எபிரெயருக்கு ஆண்டவர் சட்டதிட்டங்களைக் கொடுத்தபோதெல்லாம் அவர்களது எகிப்திய அடிமைத்தனத்தை அவர்களுக்கு நினைப்பூட்டினார் (உபா 15:15). பின்வரும் காலங்களில் அடிமைப் பழக்கங்களைத் தீர்க்கர்கள் கண்டித்தனர் (2 நாளா 28:10,11). ''அனைத்து நுகத்தடிகளையும் உடைத்துப்போட்டு'' நெருக்கப்பட்டோரை விடுவித்துவிடவேண்டுமென்று இஸ்ரவேலருக்கு அவர்கள் அழைப்பு விடுத்தனர் (ஏசா 58:6). இவ்வசனப்பகுதிக்கும் நமது வசதிக்கேற்ப ஆன்மீக அர்த்தம் கொடுத்துவிட்டோம். தேவனது வழிகாட்டுதலின்படி அடிமைகளை இஸ்ரவேலர் விடுவித்து அனுப்பாததாலேயே அவர் அவர்களை உலகெங்கும் சிதறடித்தார் (எரே 34:8-11,17). அடிமைகளாயிருந்த வேலைக்காரர், வேலைக்காரிகள் யாவர்மீதும் பரிசுத்த ஆவியைப் பொழியவிருப்பதாகத் தீர்க்கன் யோவேல் மூலம் தேவன் வாக்குப்பண்ணினார் (யோவேல் 2:29; அப் 2:18). இங்கு ''வேலைக்காரர்'' அல்லது ''ஊழியக்காரர்'' என்பது ''அடிமைகள்'' என்றே பொருள்படும். நெருக்கப்பட்டோருக்கு இயேசுவானவர் விடுதலை கூறினார் (லூக் 4:18,19). அவர்தாமே **''அடிமையின்''** வடிவெடுத்தார் (பிலி 2:7). தொண்டாற்றப்பட அல்ல, அடிமை போலத் தொண்டாற்றவேண்டும் என்பதனையே தலைமைத்துவத்தின் அதிமுக்கிய தத்துவமாய் அவர் போதித்தார் (மாற் 10:42-45). கிறிஸ்துவுக்குள் அடிமைகள் என்றும் உரிமைக் குடிமக்கள் என்றும் இல்லை (கலா 3:28; கொலோ 3:11; 1 கொரி 12:13).

இப்படியிருப்பினும் அடிமைப் பழக்கமானது புதிய ஏற்பாட்டுக் காலத்திலும் தொடர்ந்தது. எனவேதான் அடிமைகள் எவ்விதம் நடந்துகொள்ளவேண்டும் என்றும், அவர்களை எவ்விதம் நடத்தவேண்டும் என்றும் அப்போஸ்தலர் அறிவுரைகள் எழுதினர் (எபே 6:5-9; கொலோ 3:22-4:1; 1 தீமோ 6:1,2; தீத் 2:9,10; 1 பேது 2:18,19). இஸ்ரவேலர் நடுவில் மூவகை அடிமைகள் இருந்தனர்: (1) பிறப்பினால் அல்லது விலைக்கு வாங்கியதால், எபிரெயர் உடன் எபிரெயருக்குத் தரித்திரத்தின்

காரணமாக அடிமைகளாயினர் (யாத் 21:2; லேவி 25:38-41); (2) எபிரெயர் அல்லாதோரை எபிரெயர் அடிமைகளாய் விலைக்கு வாங்கினர், அல்லது போரில் சிறைப்பிடித்தனர். (ஆதி 17:12,13,23; உபா 20:11; 29:13); (3) எபிரெயரல்லாதோருக்கு எபிரெயர் தங்களைக் **கடன்** வாங்கியதின் காரணமாக அடிமைகளாய் விற்றுவிட்டனர் (லேவி 25:47,48). 19ஆம் நூற்றாண்டில்தான், முதலில் இங்கிலாந்திலும் அடுத்து அமெரிக்காவிலும், அடிமைத்தனம் ஒழிக்கப்பட்டது. மேற்கு ஆப்பிரிக்கர்களைத்தான் அவர்கள் அடிமைகளாய் வாங்கிவந்தனர். Granville Sharp, Zachary Macaulay (1768-1838), பிரபலப் பிரசங்கியாராகிய William Wilberforce (1759-1833), Thomas Buxton (1786-1845) மற்றும் T. Clarkson (1760-1846) ஆகியோரை அடிமைத்தனத்தை ஒழிப்பதற்காய்த் தேவன் எழுப்பினார். அவர்கள் ''அடிமைத்தனமானது சுவிசேஷத்தின் தத்துவங்களுக்கு ஒவ்வாதது'' என்று குரலெழுப்பினர். ஆனாலும் இன்றுவரை அடிமைத்தொழில் ஏதோவொரு வகையில் உலகெங்கும் நடக்கத்தான் செய்கிறது. இரண்டு கோடியே எண்பது இலட்சத்திற்கும் அதிகமானோர் பாலியல் தொழில், மனிதக் கடத்தல், குழந்தைத் தொழில், கொத்தடிமைத்தனம், இன்னும் இதுபோன்ற அடிமைத்தனத்திற்குள் சூழ்நிலை காரணமாகத் தள்ளப்பட்டுள்ளனர். **வறுமையினால் பலியானோர்தான்** அதிகம். அடிமைத்தனம் என்பது எவ்வகையைச் சார்ந்ததாயினும் அது சுவிசேஷத்திற்கும் மனிதனுக்குரிய தனி மதிப்பிற்கும் எதிரானது.

அமெரிக்காவின் 16ஆம் அதிபராயிருந்து, அடிமைகளை விடுவித்து, 1863இல் *''விடுதலைப் பிரகடனம்'' (Emancipation Proclamation)* வெளியிட்ட ஆபிரகாம் லிங்கன் (1809-1865) போன்ற தேசிய மற்றும் அரசியல் தலைவர்களைத் தேவன் எழுப்பித் தரும்படி ஜெபிப்போம். ஒரு நடிகரால் அவர் கொலை செய்யப்பட்டார். அடிமைகளுக்காய்க் குரல் கொடுத்த இன்னொருவர் கருப்புநிற அமெரிக்கத் திருத்தொண்டர் மார்ட்டின் லூத்தர் கிங் (1929-1968) என்பவர். அவரும் கொல்லப்பட்டார். பிரிய கிறிஸ்தவ நண்பரே, பழைய ஏற்பாட்டிலும் புதியதிலும் அடிக்கடி குறிப்பிடப்பட்டிருக்கும் அடிமைத்தனம் (slavery) என்ற கருப்பொருளைக் குறித்து எப்பொழுதாவது சிந்தித்திருக்கிறீர்களா? நம்மைத் தொந்தரவுபடுத்தாது நமக்குப் பிரியமாயிருக்கும் ஒரு சில வேதப் பகுதிகளை மட்டுமே நாம் தியானித்து வருவதாலேயே தேவனது இதயத்துடிப்பை அவர் விரும்புமளவு நாம் நமதாக்கிக்கொள்ளவில்லை. மக்களது தலைகள்மீது கைகள் வைத்து போட்டோ எடுப்பது ஒன்றுதான் நமக்குத் தெரிந்த விடுதலை ஊழியம்! **விதவைகளாகிவிட்டதாலும் கடன் சுமையினாலும்** நமது இந்தியச் சகோதர சகோதரிகளில் ஏராளமானோர் அடிமைத்தனத்தில் இருக்கின்றனர். கடன்பட்டுவிட்டதால் **அடிமைகளாகிவிடாதபடி** விதவைகளையும் அவர்களது பிள்ளைகளையும் காப்பாற்றிவிடும் எலிசா போன்ற தீர்க்கர்கள் எங்கே? (2 இரா 4:1-7). நம்மிடம் கடன் வாங்கிய எளியோரது கடன்களை நாம் தள்ளுபடி செய்துவிட்டால் நம்மில் எத்தனை பேர் தரித்திரராகிவிடுவோம்? ''எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும்'' என்று திரும்பத் திரும்ப ஜெபிக்கிறோமே! பரிசுத்த தேவனது நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்காகச் சிலுவையில் கிறிஸ்து நமது கடன்களையெல்லாம் செலுத்திவிட்டதை நினைத்துக்கொள்ளுங்கள். அடிமையாயிருந்து, அடுத்து அடிமைத் தொழிலாளியாகி, முடிவில் அடிமைத் தொழிலை ஒழிப்பவராக மாறிய ஜான் நியூட்டன் (1725-1807) என்பவர்தான் காலம் போற்றும் கீழ்க்கண்ட பாடலை இயற்றினார் —

*Amazing grace, how sweet the sound,*
*That saved a wretch like me!*
*I once was lost, but now am found,*
*Was blind, but now I see!*

இதனைத் தமிழாக்க முயன்றுள்ளேன் —

*ஆஹா, கிருபை, இரட்சிப்பு,*
*ஆகாதவன் கீதம்!*
*அலைந்தேன், கண்டுபிடித்தார்,*
*அந்தகன் பார்க்கிறேன்!*

முழுப்பாடலின் தமிழாக்கம் என்னிடமுண்டு. இப்பாடலைப் பாடும்போதெல்லாம் அல்லது கேட்கும் போதெல்லாம் கண்ணீரை என்னால் அடக்கமுடிவதில்லை.

**சிறையடைப்பு** என்பது நாம் கவனிக்கவேண்டிய இன்னொரு அடிமைத்தனம். சிறைக்கு உள்ளேயிருப்போரைவிட வெளியேதான் திருடர்கள், கொலையாளிகள் மற்றும் கற்பழித்தவர்கள் அதிகம். இயேசுவைப் பொருத்தவரை, இருதயத்தில் துராசையே விபசாரம்தான் (மத் 5:28). யோவானைப் பொருத்தவரை, இருதயத்தில் பகையே கொலைதான் (1 யோ 3:15). தீர்ப்பளிக்கப்பட்ட குற்றவாளி களைவிடத் தவறாய்ப் பிடிபட்டவர்களும் விசாரணைக் கைதிகளும்தான் அதிகமானோர். இன்னொரு ஜெபக் கூட்டத்திற்குப் போவதற்குப் பதிலாக, சிறைச்சாலை ஊழியக்குழுக்களோடு முடிந்த வேளை களிலும் முடிந்த இடங்களிலும் சேர்ந்துகொள்ளுங்கள். இயேசுவின் கலப்படமற்ற வார்த்தைகள் இதோ: ‘‘நான் காவலில் இருந்தேன்; நீங்கள் என்னைப் பார்க்க வந்தீர்கள்’’ (மத் 25:36இ). அப்படியே, எபிரெய நிருப ஆக்கியோனின் அறிவுறுத்தலும் மனதைத் துளைக்கிறது: ‘‘கட்டப்பட்டிருப்பவர்களுடன் நீங்களும் கட்டப்பட்டவர்கள் போல அவர்களை நினைத்துக்கொள்ளுங்கள்; நீங்களும் உடலில்தான் இருக்கிறீர்கள் என்று உணர்ந்து, துன்புறுத்தப்படுபவர்களை மறந்துவிடாதீர்கள்’’ (எபி 13:3). வசதியுள்ளோர் எளிதாக ஜாமீனில் வெளியே வந்துவிடுவர்; வறியோரின் பாடுதான் பரிதாபம். நீதிமொழிகள் 24:11,12இல் உள்ள எச்சரிப்பு நடுங்க வைக்கிறது: ‘‘கொல்லப்படுவதற்கு இழுத்துச்செல்லப்படுவோரை **விடுவிக்கப்** பாருங்கள்; ‘அதைப்பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது’ என்று சொல்வீர்களானால், இருதயத்தில் இருப்பதை அறிபவர் உங்கள் எண்ணத்தையும் அறிவார் அல்லவா? உங்கள் உள்ளத்தைப் பார்க்கிறவர் அதை அறிவார் அல்லவா? ஒவ்வொரு செயலுக்கும் ஏற்றபடி அவர் பலனளிப்பார் அல்லவா?’’

திருச்சபைகளிலும் திருச்சங்கங்களிலும்கூட பலவித அடிமைத்தனம் இருக்கிறது. சபை மேய்ப்பர்கள் அளவுக்குமீறிச் சபையாரைக் கட்டுப்படுத்தி ஆளுகை செய்வது பிரதான மேய்ப்பருக்குப் பிடிக்காது (1 பேது 5:2-4). சபையானது சங்கிலியாகிவிடக்கூடாது. The Church must not become a clutch. ‘‘உள்ளேயும் வெளியேயும்’’ சென்றுவர விசுவாசிகளுக்குச் சுதந்திரம் இருக்கவேண்டும் (யோ 10:9). பாஸ்டர்மாருக்கு விசுவாசிகள் சொந்தம் அல்ல; பாஸ்டர்மார்தான் விசுவாசிகளுக்குச் சொந்தம் (1 கொரி 3:21-23). ஊழியச் சங்கங்களின் தலைவர்கள் தங்களை வேலைக்கு அமர்த்துபவர்கள் (employers) என்றும் ஊழியர்களை வேலைக்கு அமர்த்தப்பட்டவர்கள் என்றும் நினைத்துவிடக்கூடாது. இல்லவே இல்லை! இருதிறத்தாரும் ஆதரவாளர்கள் அனுப்பும் காணிக்கையைப் பகிர்ந்துகொள்ளும் ‘‘உடன் ஊழியர்’’ என்பது நினைவிலிருக்கவேண்டும் (வச 9). தனது பாக்கெட்டிலிருந்து அல்ல, நிறுவனத்தின் பணத்தையே உக்கிராணக்காரன் என்ற பொறுப்பில் பொருளாளர் பகிர்ந்தளிக்கிறார் (1 கொரி 4:1,2). மிஷனரி இயக்கங்களின் தலைவர்களே, மிஷனரிகளின் கதறல்களையும் கூக்குரல்களையும் அமுக்கி, அடக்கி, அமைதிப்படுத்த முயலாதீர்கள். அவை அறுப்பின் ஆண்டவரது காதுகளில் விழுகின்றன. கவனம்! நான் ஆசீர்வாத இளைஞர் இயக்கத்தின் (BYM) தலைவனாயிருந்தும், எனது உடன் மிஷனரிகளோடு என்னை அடையாளப்படுத்திக்கொள்ளும் நோக்குடன், தலைமையகக் கணக்காளரிடமிருந்து கை நீட்டி மாதச் சம்பளம் வாங்கிக்கொள்ளும்படி கணக்குப் பிரிவுக்குள் செல்லுவேன். தங்களது உடனாளிகளின் பாதங்களைக் கழுவிடக் குனிபவனே முன்மாதிரியான தலைவன் (யோ 13:13-15). எந்த வகையிலும், எவ்வித வார்த்தைகளினாலும், ஊழியரை அச்சுறுத்தாதீர்கள் (எபே 6:9). நாம் தேவனுக்கு மட்டுமே அடிமைகள்!

## நம்மை நாமே விடுவித்தல் (Self-deliverance)

தனது வாழ்வின் அனைத்துப் பகுதிகளிலும் நூற்றுக்கு நூறு சதவீதம் விடுதலை அனுபவிப்பவர் எவரும் இல்லை; தேவனிடம் விடுதலை வேண்டிடத் தேவையில்லாதவரும் எவரும் இல்லை. ஒரு வேளை அது தீயது என்றில்லாவிடினும், நமது வாழ்விலுள்ள எத்தனையோ கட்டுகள் நமது கண்களுக்குத் தென்படாமலிருக்கலாம். நித்திய வாழ்வுக்குள் நுழைந்த பின்னர்தான் விழுகையின் விளைவும் விரும்பப்படாததுமான அத்தனையிலிருந்தும் நாம் விடுபடுவோம். ‘‘கர்த்தாவே, என்னை **விடுவியும்**’’

என்று தாவீது அடிக்கடி ஜெபித்தது இதற்கு ஒரு சான்று (சங் 6:4; 17:13; 22:20, முதலியன). அவர் சந்தித்த அதே பிரச்னைகள் நமக்கு வராமலிருக்கலாம். ஆனாலும், நமது வாழ்வில் நமக்குத் தெரிந்தோ தெரியாமலோ குறைவாயிருக்கும் பகுதிகளில் தேவனது விடுவிக்கும் வல்லமை செயல்படவேண்டும் என்ற நிலையான உணர்வு நமக்கு இல்லையேல், நாம் நம்மை அறியாது நமது மீதே அளவுகடந்த நம்பிக்கை கொண்டுவிடுவோம். நாம் தேறிவிட்டோம் என்று நமது வாழ்வின் எக்கட்டத்திலும் நாம் மார் தட்ட முடியாது (பிலி 3:12). பவுலடியார் தனது உடலை நெடுகவே அடக்கி அதனை எப்பொழுதும் ஒரு கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொள்ளவேண்டியதிருந்தது (1 கொரி 9:27). விடுதலைக்கான ஜெபங்கள் நிறைந்துள்ள சங்கீதப் புத்தகத்தை அடிக்கடி வாசியுங்கள்.

நாம் கிறிஸ்தவ வாழ்வில் வளர்ந்துவரும்போது, நமது தனிப்பட்ட **சொந்த வாழ்வில் விடுதலை** அனுபவித்து வாழ்ந்திட நமது பங்கினை நாம் நிறைவேற்றிடவேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கிறார். ''தனக்குத்தான் உதவுபவனுக்கே தயாபரன் உதவுகிறார்'' என்பது ஒரு முதுமொழி. (God helps those who help themselves!). இக்காரியத்தில் தனி நபரது பொறுப்பினைச் சுட்டிக்காட்டும் ஒரு சில திருவசனங்கள் இதோ: சகரியா 2:7, ''பாபிலோனில் குடியிருக்கும் சீயோனே, உன்னை விடுவித்துக்கொள்.'' ஏசாயா 52:2, ''எருசலேமே, தூசியை உதறிவிட்டு எழுந்திரு; சிறைப்பட்டுப்போன சீயோன் குமாரத்தியே, உன் கழுத்திலுள்ள கட்டுகளை அவிழ்த்துவிடு.'' எபேசியர் 5:14, ''தூங்குகிற நீ விழித்து, இறந்திருப்போரை விட்டு எழுந்திரு; அப்பொழுது கிறிஸ்து உன்னைப் பிரகாசிப்பிப்பார்.'' விடுதலைக்காய் நாம் செய்ய வேண்டியவற்றைச் செய்யவேண்டிய பல வாழ்க்கைப் பகுதிகளில் ஒரு சிலவற்றை இங்கு வரிசைப் படுத்துகிறேன் —

*(1) ஆவிக்கும் மாம்சத்திற்கும் இடையிலான போராட்டம்* (Battle between flesh and spirit)

தனது வாழ்வில் நெடுகவே விடாது நடந்துகொண்டிருக்கும் இப்போராட்டத்தைப் பவுலடியாரைவிட வேதாகம ஆசிரியர்கள் எவரும் இவ்வளவு வெளிப்படையாய் அறிக்கையிடவில்லை. அவர் கூறுவதாவது: ''நான் விரும்பும் நல்லதைச் செய்யாது, நான் விரும்பாத தீயதையே செய்கிறேன்'' (ரோ 7:19). **விடுதலை** நாடும் அவரது கதறலைக் கேளுங்கள்: ''பரிதாபத்திற்குரிய மனிதன் நான்! இறப்புக்குரிய இவ்வுடலிலிருந்து என்னை விடுதலையாக்குவது யாரோ?'' (வச 24). கதறலான இவ்வறிக்கை மனந்திரும்புதலுக்கு முன்னுள்ள அவரது வாழ்க்கையைப்பற்றியது அல்ல. இவ்வசனப்பகுதி முழுவதிலும் அவர் நிகழ்கால வினைச்சொற்களையே பயன்படுத்துகிறார்: ''அறிந்திருக்கிறேன் ... செய்கிறேன் ... காண்கிறேன் ... சேவிக்கிறேன்.'' இவ்வுலகைவிட்டு நாம் போகும்வரை இந்தப் பழைய மனிதன் நம்முடன்தான் வாழுவான். பழைய மனிதனது ஆசைகளுக்கு நெடுகவே மறுப்பு தெரிவித்துக்கொண்டிருக்கும்போது புதிய மனிதன் பலப்பட்டுக்கொண்டிருப்பான் (கலா 5:24). இதனால் ''ஆவியின் கனி'' பெருகும், ''மாம்சத்தின் செயல்கள்'' குறுகும் (வச 16-23). வேறு வார்த்தைகளில் சொன்னால், இவ்வனுபவமானது பழைய மனிதனை விரட்டியடித்துவிடுவது அல்ல; மாறாக, புதிய மனிதனை விடுதலையாக்குவதாம். Not eradication but emancipation! (ரோ 8:2). நான் பாவத்திற்குச் செத்து கிறிஸ்து இயேசுவுக்குள் தேவனுக்காய் உயிர் வாழ்கிறேன் என்று ''எண்ணிக்கொண்டே'' இருக்கவேண்டும் (6:11). எனது உடலின் அவயவங்களை நீதியின் ஆயுதங்களாய்த் தேவனுக்கு ''ஒப்புக்கொடுத்துக்கொண்டே'' இருக்கவேண்டும் (வச 13,19). இது என்னை இனிப் பாவத்திற்கு அல்ல, ''தேவனுக்கே அடிமை'' என மாற்றிவிடுகிறது (வச 22அ). அதன் விளைவு பரிசுத்தம்; முடிவு பரலோகம் (வச 22ஆ). இரட்சிப்பு என்பது முக்காலத்திலும் **விடுதலையையே** தருகிறது. கடந்தகால இரட்சிப்பு என்பது பாவத்தின் *தண்டனையிலிருந்து* (penalty) விடுதலை (ரோ 6:23). நிகழ்கால இரட்சிப்பு என்பது பாவத்தின் *வல்லமையிலிருந்து* (power) விடுதலை (வச 14). வருங்கால இரட்சிப்பு என்பது பாவத்தின் *பிரசன்னத்திலிருந்தே* (presence) விடுதலை (எபி 9:28; வெளி 21:27). இச்சத்தியத்தை நீங்கள் விசுவாசித்துப் புரிந்துகொண்டால் எல்லாவிதக் குற்றவுணர்வுகளிலிருந்தும் (self-condemnation) விடுதலையாவீர்கள் (ரோ 8:1,28-34).

*(2) வழக்கங்களும் அடிமைப் பழக்கங்களும்* (Habits and Addictions)

குடும்பப் பின்னணியிலிருந்தோ சமுதாயத்திலிருந்தோ நீங்கள் கற்றுக்கொண்ட சில பழக்க வழக்கங்கள் உங்கள் வாழ்வில் இருக்கலாம். அவற்றில் ஒரு சில ''நியாயமானவை'' என்றிருந்தாலும் ''நன்மையானவை'' என்று சொல்ல முடியாதிருக்கலாம் (1 கொரி 6:12; 10:23). தேவனது வார்த்தையின் வெளிச்சத்தில் ஒருவர் தேவனுடன் நடைபோட்டுக்கொண்டிருக்கும்போது, அவரது ஆன்மீக உணர்வு கூர்மையடைகிறது. அவர் வழக்கமாய்ச் செய்துவரும் காரியங்களில் எவற்றையெல்லாம் விட்டுவிட்டால் தனது ஆன்மீக வாழ்வில் இன்னும் ஆழமாகவும் உயரமாகவும் செல்ல முடியும் என்று அவரே முடிவெடுக்க வேண்டும். துர்ப்பழக்கங்களைக் களைவதற்காகக் கெட்ட தோழமைகளைத் துண்டித்துவிடுவது தனி நபரது பொறுப்பு (சங் 1:1; 1 கொரி 15:33). நமக்குள் குடிகொண்டிருக்கும் தூயாவியானவர் நமக்கு ''உதவியாளர்'' (Helper) (யோ 14:26; 15:26; 16:7). ''தேற்றரவாளர்'' (Comforter) மற்றும் ''உதவியாளர்'' ஆகிய இரு சொற்களும் *"paracletos"* என்ற கிரேக்கச் சொல்லுக்கு இணையான மொழியாக்கங்கள். லத்தீன் மொழியில் இது ''பலப்படுத்துகிறவர்'' (Strengthener) எனப்படுகிறது. ஆம், நமது பரிசுத்த விருப்பங்கள் மற்றும் தீர்மானங்களை நிறைவேற்றுவதற்காய்ப் பரிசுத்த ஆவியானவர் நம்மைப் ''பலப்படுத்தி'' நமக்கு ''உதவுகிறார்,'' நாம் தடுமாறும்போது அவர் நம்மைத் ''தேற்றுகிறார்!'' குடிப்பழக்கங்கள் போன்றவற்றி லிருந்து விடுதலை பெறுவதற்காய் நாம் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையைச் சார்ந்துகொள்ளலாம். இயேசுவானவரே பிதாவானவர் அனுப்பிய முதலாம் விடுதலை நாயகர் (First Liberator) (யோ 8:36). ஆவியானவரே பிதாவானவர் அனுப்பிய இரண்டாம் விடுதலை நாயகர் (Second Liberator) (2 கொரி 3:17,18). நம்மை விடுவிப்பதற்காய் அவர்கள் பயன்படுத்தும் ஆயுதம் ''ஆவியின் பட்டயம்'' எனும் ''தேவனுடைய வசனம்'' (யோ 8:32; எபே 6:17ஆ). இப்பட்டயமானது நம்மை நாமே அழித்துக் கொண்டிருக்கும் துர்ப்பழக்கங்களில் நம்மைக் கட்டி வைத்திருக்கும் கயிறுகளை அறுத்தெறிகிறது. அடிமைப்பழக்கங்களிலிருந்து நீங்கள் வெளியே குதிக்கும்போது, தண்ணீர்மீது நடப்பதுபோல் உணருவீர்கள். கொந்தளிக்கும் அலைகள் போன்ற சோதனைகளைக் கண்டு கலங்கிவிடாது, கரை சேர்க்கும் கர்த்தர்மீதே கண்களைப் பதித்திடுங்கள். அமிழ்ந்துவிடாது அவர் உங்களைத் தூக்கிவிடுவார் (மத் 14:28-31). ஊக்கமது கைவிடேல்! குடிப்பழக்க அடிமைத்தனத்தின் பிடிப்பிலிருந்து வெளிவரவே முடியவில்லை என்று நீங்கள் உணர்ந்தால் 'போதைப் பழக்க நீக்கத் திட்டம்' (De-addiction Programme) ஒன்றில் மருத்துவ ஆலோசனையுடன் சேர்ந்துகொள்ளுங்கள். பொறுமையாயிருங்கள். குடும்ப ஆதரவு நாடுங்கள். அது பேருதவியாயிருக்கும்.

*(3) பொருளாசை எனும் விக்கிரகாராதனை* (Idolatry of Materialism)

போரிடுவதால் அல்ல, ஓடிவிடுவதாலேயே நாம் மேற்கொள்ளக்கூடிய இரு பாவங்கள் உண்டு. (Not fight but flight!) அவையானவன: விபசாரம், விக்கிரகாராதனை. விபசாரத்திற்கு விலகியோடத் திருமறையில் கட்டளை பெற்றிருக்கிறோம் (1 கொரி 6:18; 2 தீமோ 2:22). அப்படியே விக்கிரகாராதனைக்கும் விலகியோடவேண்டும் என்பது கட்டளை (1 கொரி 10:14). பண ஆசையை ''விக்கிரகாராதனை'' என்றே பைபிள் அழைக்கிறது (கொலோ 3:5ஆ). பண ஆசை பிடித்தவனை அது ''விக்கிரகாராதனைக்காரன்'' என்றழைக்கிறது (எபே 5:5). பண ஆசை என்பது ஒரு ''வலை,'' மற்றும் அது ஓர் ''ஈட்டி,'' என்ற நிலையில் தீயவை அனைத்திற்கும் வேராய் அது அமைகிறது (1 தீமோ 6:9,10). அதனை விட்டு ''ஓடிவிட'' வேண்டியது **<u>நமது</u>** பொறுப்புதான் (வச 11). வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகள் சந்திக்கப்பட்டுவிட்டால் மனரம்மியமாயிருங்கள் (வச 8). மன திருப்தி என்பது **<u>நாமே</u>** விளைவிக்க வேண்டிய நற்குணம். ஒருவனது பணப்பை மனந்திரும்பும்வரை அவன் முழுமையாய் இன்னும் இரட்சிக்கப்படவில்லை என்றே சொல்லவேண்டும். எனவேதான் தீர்க்கர்களிலெல்லாம் தீர்க்கரானவர் அதனைத் திருமுழுக்கிற்குப் பிரதான நிபந்தனையாய் முன்வைத்தார் (லூக் 3:7-14). பண ஆசையின்மீது வெற்றி பெறுவதை இரண்டாம் இரட்சிப்பு என்றுகூட அழைக்கலாம் (லூக் 18:24-27; 19:8,9). உடல் முழுவதையும் கெடுக்கும் ''கெட்ட கண்'' என்று இயேசு எதனைக் குறிப்பிட்டார் என்று சிந்தித்துப் பார்த்திருக்கிறீர்களா? மத்தேயு 6:19-24ஐ வாசித்துப் பாருங்கள். அவர் இப்பகுதியில் பாலியல் துராசையை அல்ல, ''செல்வத்தைப்'' பற்றியே பேசிக்கொண்டிருந்தார். ஆம், பணப்பைத்தியம் பிடித்த கிறிஸ்தவன் குருடனே! அன்புள்ள பிரசங்க நண்பரே, மக்களுக்கு நீங்கள் விடுதலை ஊழியம் செய்ய விரும்பினால் இச்சத்தியத்தைத் தெளிவாய்த் திட்டமாய்ப் போதியுங்கள்.

*(4) முடமாக்கும் மனத்தொய்வு* (Paralysing Depression)

கிறிஸ்தவர் மற்றும் கிறிஸ்தவரல்லாதோர் யாவர் நடுவிலும் மனத்தொய்வு என்பது மிகவும் சகஜமாகிவிட்டது. முடியவில்லையே எனும் விரக்தி, தோல்விகளால் தைரியமிழப்பு, வாட்டும் கவலை, பலமிழந்த மனநிலை, வாழ்க்கையில் அர்த்தமிழப்பு, எதிலும் உற்சாகமின்மை போன்றவையே இதற்குக் காரணங்கள். வீரதீரனான கிதியோனுக்கும் மனத்தொய்வின் கட்டங்கள் இருந்தன (நியா 6:12,13). விசுவாச வீரனான எலியாவுக்கும் மனத்தொய்வின் நாட்கள் இருந்தன (1 இரா 19). உற்சாகத் தொழுகைக்காரனாகிய தாவீதுக்கும் மனத்தொய்வின் வேளைகள் இருந்தன (சங் 22:1,2,6-8). நாடுகளுக்குத் தீர்க்கனாய் தேவனால் அபிஷேகிக்கப்பட்ட எரேமியாவுக்கும் மனத்தொய்வின் புலம்பல்கள் இருந்தன (எரே 1:5; 20:7-10). மனத்தொய்விற்கான காரணங்கள் அத்தனையையும் இங்கு பட்டியலிட்டுவிட முடியாது. உங்களால் கண்டுபிடிக்க முடிந்த காரணிகளை வேரறுத்துவிடுங்கள். உள்ளேயே அடக்கிவைத்துக்கொண்டிராமல், முதிர்ச்சியுள்ள நம்பகமான நண்பரொருவருடன் பகிர்ந்து கொண்டு ஆலோசனையும் ஊக்குவிப்பும் பெற்றிடுங்கள் (1 தெச 5:14ஆ). ஜெபத்தோழரது ஐக்கியத்திலிருந்து உங்களைத் தனிமைப்படுத்திக்கொள்ளாதேயுங்கள். உங்களது வாழ்க்கைப் பயணத்தைத் தொடர்ந்திட உங்களுக்குச் சூடான இட்லி தோசையும் போர்ன்விட்டாவும் கொடுக்கும் தூதராய் தேவன் அவர்களைப் பயன்படுத்துவார் (1 இரா 19:6,7). எதிர்மறை எண்ணங்களை அடக்கி வைக்காமல், திருவசன வாக்குகளை அவற்றிற்கு மாற்றாக்குங்கள். மனத்தொய்விலிருந்து நம்மை வெளிக்கொண்டுவர தேவனது வார்த்தைக்கு இணையானது எதுவுமில்லை. 119ஆம் சங்கீதம் இதனைத் தெளிவாக்குகிறது (வச 28,50,61,83,92,110,141,143). வாசிக்கவேண்டுமென்று தோன்றுகிறதோ இல்லையோ, உங்களுக்கு பிடித்தமான வேதப்பகுதிகளைத் திரும்பத் திரும்ப வாசியுங்கள். சரிவிகித உணவு, போதுமான தூக்கம், கிரமமான உடற்பயிற்சி, சூரியவொளி படுதல், போன்றவற்றின் மூலம் ஆரோக்கியத்தைக் காத்துக்கொள்ளுங்கள். மனோதத்துவ ஆலோசனை தேவைப்பட்டால் ஆவன செய்யுங்கள். (கிறிஸ்தவ மனோதத்துவ ஆலோசகரான எங்கள் மகள் இவாஞ்சலின் அவர்களை 98430 11943 என்ற எண்ணில் தொடர்புகொள்ளலாம்.)

## முடிவான விடுதலை (Final Deliverance)

இரண்டு சாபங்களை விவிலியம் குறிப்பிடுகிறது: விழுகையின் சாபம், நியாயப்பிரமாணத்தின் சாபம். (The Curse of the Fall and the Curse of the Law). சிலுவையில் கிறிஸ்து நமக்காய் மரித்ததால், நியாயப்பிரமாண சாபத்திலிருந்து நாம் **விடுதலை** பெற்றுள்ளோம். கலாத்தியர் 3:13, ‘‘கிறிஸ்து நமக்காகச் சாபமாகி, நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக்கொண்டார்.’’ ஆதியாகமம் 3:14-19இல் சொல்லப்பட்டுள்ள விழுகையின் சாபம் இன்னும் நீக்கப்படவில்லை. அச்சாபமானது மிருகவுலகின் மீதும் (வச 14,15), பெண்ணின் மீதும் (வச 16), ஆடவனின் மீதும் (வச 17-19), தாவரவுலகின் மீதும் (வச 17ஆ,18) கூறப்பட்டது. இந்தச் சாபம் இன்னும் அகற்றப்படாததால், ‘‘இந்நாள் வரை படைப்பு அனைத்தும் ஒருங்கே பேறுகால வேதனையுற்றுத் தவிக்கின்றது. படைப்பு மட்டுமல்ல, தூயாவியின் முதற்கனிகளைப் பெற்றுக்கொண்டுள்ள நாமும் நமது **உடலானது மீட்கப்படும்** நாளை எதிர்நோக்கிப் பெருமூச்சு விடுகிறோம்’’ (ரோ 8:18-24). முடிவான, முழுமையான விடுதலையானது கிறிஸ்து திரும்பி வரும்போதுதான் கிட்டும். புதிய வானம், புதிய பூமியில் ‘‘இறப்போ, துக்கமோ, அலறலோ, வலியோ இருக்காது; ஏனெனில் முன்பு இருந்தவை எல்லாம் மறைந்து போயிருக்கும்’’ (வெளி 21:1-4).

R. Stanley, 13 Church Colony, Vellore 632 006, India
*Tel: 00 91 98437 07600, 98430 11943 (WhatsApp)*
*<stanleyonbible@hotmail.com> <evangelinestanley1@gmail.com>*
***www.StanleyOnBible.com     YouTube: StanleyOnBible***